

Saidai Duraisamy's
**Manidhanaeyam Free IAS Academy**
(Run by Manidha Naeyam Charitable Trust)
28, 1st Main Road, CIT Nagar, Chennai - 35 (HO).
Mail Address: manidhanaeyam@gmail.com
Website: www.mntfreeias.com

| வினாத்தொகுப்பு எண்: | பதிவு எண்: | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

# TNPSC - தொகுதி - IV & VAO தேர்வு - இணைய வழி தொடர் மாதிரி தேர்வு
## இந்த வினாப்புத்தகம்
## பகுதி-அ (பொதுத் தமிழ்) உள்ளடக்கியது

**கால அளவு: ஒரு மணி நேரம் முப்பது நிமிடம்** **மொத்த மதிப்பெண்கள்: 150**

வினாக்களுக்கு பதிலளிக்கும் முன் கீழ்கண்ட அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்

## முக்கிய அறிவுரைகள்

1. இந்த வினாத்தொகுப்பு, தேர்வு தொடங்குவதற்கு 15 நிமிடங்களுக்கு முன்னதாக வழங்கப்படும்.
2. இந்த வினாத்தொகுப்பு, 100 வினாக்களைக் கொண்டுள்ளது.
3. விடையளிக்கத் தொடங்கும் முன் இவ்வினாத்தொகுப்பில் எல்லா வினாக்களும் வரிசையாக இடம் பெற்றுள்ளனவா என்பதையும், இடையில் பெற்றுத்தாள்கள் எவையும் இல்லை என்பதையும் உறுதி செய்து கொள்ளவும். வினா தொகுப்பில் ஏதேனும் குறைபாடு இருப்பின், அதனை முதல் பத்து நிமிடங்களுக்குள் அறைக்கண்காணிப்பாளரிடம் தெரிவித்து, சரியாக உள்ள வேறொரு வினாத்தொகுப்பினை பெற்றுக்கொள்ள வேண்டும். தேர்வு தொடங்கிய பின்பு இது குறித்து முறையிட்டால் வினாத் தொகுப்பு மாற்றித் தரப்படமாட்டாது.
4. எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும். எல்லா வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.
5. உங்களுடைய பதிவு எண்ணை இந்தப் பக்கத்தின் வலது மேல் மூலையில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் நீங்கள் எழுத வேண்டும். வேறு எதையும் வினாத்தொகுப்பில் எழுதக்கூடாது.
6. விடைத்தாள் ஒன்று விடைகளை குறிப்பதற்கு அறைக்கண்காணிப்பாளரால் உங்களுக்கு வழங்கப்படும். விடைகளை குறிப்பது உள்ளிட்ட அவசியம் பின்பற்றப்பட வேண்டிய அறிவுரைகள் விடைத்தாளிலும், தேர்வுக்கூட அனுமதிச் சீட்டிலும் வழங்கப்பட்டுள்ளன.
7. உங்களுடைய வினாத்தொகுப்பு எண்ணை (Question Booklet Number) விடைத்தாளின் முதல் பக்கத்தில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் கருமை நிற மையுடைய பந்துமுனைப் பேனாவினால் குறித்துக்காட்டவேண்டும். வினாத்தொகுப்பு எண்ணை விடைத்தாளில் சரியாகக் குறித்துக் காட்டத் தவறினாலோ அல்லது குறிக்க தவறினாலோ உங்களுடைய விடைத்தாள் செல்லாததாக்கப்படும்.
8. ஒவ்வொரு வினாவும் (A), (B), (C), (D), (E) என ஐந்து பதில்களைக் (விடைகள்) கொண்டுள்ளது. நீங்கள் (A) அல்லது (B) அல்லது (C) அல்லது (D) இவைகளில் ஒரே ஒரு சரியான விடையைத் தேர்வு செய்து விடைத்தாளில் குறித்துக்காட்ட வேண்டும். ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடை இருப்பதாக நீங்கள் கருதினால், மிகச்சரியானது என நீங்கள் எதைக்கருதுகிறீர்களோ அந்த விடையை விடைத்தாளில் குறித்துக்காட்ட வேண்டும். உங்களுக்கு விடை தெரியவில்லை, எனில், நீங்கள் (E) என்பதை அவசியம் நிரப்பவேண்டும். எப்படியாயினும், ஒரு கேள்விக்கு ஒரே ஒரு விடைதான் தேர்ந்தெடுக்க வேண்டும். நீங்கள் ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விடையளித்தால், அவற்றுள் ஒரு விடை சரியானதாக இருந்தாலும் அந்த விடை தவறானதாகவே கருதப்படும்.
9. நீங்கள் வினாத்தொகுப்பின் எந்தப்பக்கத்தையும் நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நேரத்தில் இந்த வினாத்தொகுப்பினையோ அல்லது விடைத்தாளையோ தேர்வு அறையை விட்டு வெளியில் எடுத்துச் செல்லக்கூடாது. தேர்வு முடிந்தபின் நீங்கள் உங்களுடைய விடைத்தாளை கண்காணிப்பாளரிடம் கொடுத்துவிடவேண்டும். இவ்வினாத் தொகுப்பினை தேர்வு முடிந்த பின்னர் மட்டுமே நீங்கள் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவீர்கள்.
10. குறிப்புகள் எழுதி பார்ப்பதற்கு வினா தொகுப்பின் கடைசி பக்கத்திற்கு முன் உள்ள பக்கங்களை பயன்படுத்திக் கொள்ளலாம். இதைத்தவிர, வினாத்தொகுப்பின் எந்த இடத்திலும் எந்தவித குறிப்புகளையும் எழுதக்கூடாது. இந்த அறிவுரை கண்டிப்பாக பின்பற்றப்படவேண்டும்.
11. நீங்கள் மேற்கண்ட அறிவுரைகளில் எவற்றையாவது பின்பற்ற தவறினால் தேர்வாணையம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரிடும் என அறிவுறுத்தப்படுகிறது.

[Turn over]



Saidai Duraisamy's
Manidhanaeyam Free IAS Academy
(Run by Manidha Naeyam Charitable Trust)
28, 1st Main Road, CIT Nagar, Chennai - 35 (HO).
Mail Address: manidhanaeyam@gmail.com
Website: www.mntfreeias.com

| Question Booklet No: |
| --- |
| |

**Register Number:** | | | | | | | | | | |

## TNPSC - Group - IV & VAO Exam - Online Test Series
## This Booklet Contains
## Part-A (Tamil Eligibility-Cum-Scoring Test)

**Duration: One Hour Thirty Minutes** — **Total Marks : 150**

**Read the following instructions carefully before you begin to answer the questions**

## IMPORTANT INSTRUCTIONS

1. You will be supplied with this question booklet 15 minutes prior to the commencement of the examination.
2. This Question Booklet contains 100 questions.
3. Before answering the questions, you .shall check whether all the questions are printed serially and ensure that there are no blank pages in the question booklet. If any defect is noticed in the question booklet, it shall be reported to the invigilator within the first 10 minutes. and get it· replaced with a complete question booklet. If the defect is reported after the commencement of the examination, it will not be replaced.
4. Answer all the questions. All the questions carry equal marks.
5. You must write your Register Number in the space provided on the top right side of this page. Do not write anything else on the Question Booklet.
6. An answer sheet will be supplied to you separately by the room invigilator to shade the answers. Instructions regarding filling of answers etc., which are to be followed mandatorily, are provided in the answer sheet and in the mem"oranduin of admission (Hall Ticket).
7. You shall write and shade your question booklet number in the space provided on page one of the answer sheet with BLACK INK BALL POINT PEN. If you do not shade correctly or fail to shade the question booklet number, your answer sheet will be invalidated.
8. Each question comprises of five responses (answers) : i.e. (A), (B), (C), (D) and (E). You have to select ONLY ONE correct answer from (A) or (B) or (C) or (D) and shade the same in your answer sheet. If you feel that there are more than one 90rrect answer, shade the one which you consider the best. If you do not know the answer, you have to mandatorily shade (E). In any case, choose ONLY ONE answer for each question. If you shade more than one answer for a question, it will be treated as a wrong answer even if one of the given answers happens to be correct.
9. You should not remove or tear off any sheet from this Question Booklet.You are not allowed to take this Question Booklet and the Answer Sheet out of the Examination Room during the time of examination. After the examination. you must hand over your Answer Sheet to the Invigilator. You are allowed to take the Question Booklet with you only after the Examination is over.
10. You should not make any marking in the question booklet except in the sheets before the last page of the question booklet, which can be used for rough work. This should be strictly adhered to.
11. Failure to comply with any of the above instructions will render you liable for such action as the Commission may decide at their discretion.

[Turn over]

## பகுதி-அ - பொது தமிழ்
## Part-A- General Tamil
## 8 ஆம் வகுப்பு – தொகுதி - 1

| | | | |
|---|---|---|---|
| வினாக்கள் : 1 - 100 | | மொத்த மதிப்பெண்கள் | : 150 |
| Questions : 1 - 100 | | Total Marks | : 150 |

1. ..........., ........... ஆகிய இருமெய்களும் நாவின் இடைப்பகுதி, நடு அண்ணத்தின் இடைப்பகுதியைப் பொருந்துவதால் பிறக்கின்றன.
   (A) க், ங்
   (B) ச், ஞ்
   (C) ட், ண்
   (D) த், ந்

2. திருக்குறளில் பொருட்பாலில் இல்லாத இயல் எது?
   (A) ஒழிபியல்
   (B) ஊழியல்
   (C) அமைச்சியல்
   (D) அரசியல்

3. நீலகேசியின் ஆசிரியர் ...............
   (A) நாதகுத்தனார்
   (B) தோலாமொழித்தேவர்
   (C) திருத்தக்கதேவர்
   (D) ஆசிரியர் பெயர் தெரியவில்லை

4. மருமக்கள் வழி மான்மியம் என்ற நூலின் ஆசிரியர் யார்?
   (A) வீரமாமுனிவர்
   (B) பனம்பாரனார்
   (C) கவிமணி
   (D) இரா.பி. சேதுப்பிள்ளை

5. மேல்வாய்ப்பல்லை கீழுதடு பொருந்துவதால் ............. பிறக்கிறது.
   (A) வ்
   (B) ய்
   (C) ப்
   (D) த்

6. உயிரும் நீ மெய்யும்நீ ஓங்கும் அறமாம்
பயிரும் நீ இன்பம்நீ அன்புத் தருவும் நீ
வீரம்நீ காதல்நீ - எனச் செந்தமிழைப் பாடியவர் .......
   (A) பாரதியார்
   (B) வாணிதாசன்
   (C) வெங்கம்பூர் சாமிநாதன்
   (D) து. அரங்கன்

7. தமிழ் எழுத்துகள் இப்போதுள்ள நிலையான வடிவத்தைப் பெற .......... காரணமாக அமைந்தது.
   (A) அச்சுக்கலை
   (B) நற்கலை
   (C) கவின்கலை
   (D) நுண்கலை

8. 'தமிழின் தனிப்பெருஞ்சிறப்புகள்' என்ற நூலை எழுதியவர் ............
   (A) வாணிதாசன்
   (B) இரா. இளங்குமரன்
   (C) புலவர் செ. இராசு
   (D) கவிமணி

9. உலக இயற்கைவளப் பாதுகாப்பு நாளாகக் கடைபிடிக்கப்படும் நாள் ..........
   (A) செப்டம்பர் 28
   (B) ஜனவரி 28
   (C) ஜலை 28
   (D) மார்ச் 28

10. ................ என்ற இரு மெய்யெழுத்துக்களும் மேல்வாயை நாக்கின் நுனி மிகவும் பொருந்துவதால் பிறக்கின்றன.
   (A) ப், ம்
   (B) ர், ழ்
   (C) ற், ன்
   (D) த், ந்

11. பின்வரும் நூல்களுள் வாணிதாசன் எழுதாத நூல் எது?
   (A) தமிழச்சி
   (B) தொடுவானம்
   (C) எழிலோவியம்
   (D) தமிழச்சியின் கத்தி

12. பின்வரும் திருக்குறளில் சீர்களை முறைப்படுத்தி எழுதுக.
    (A) ஆணைகொடிது வினைபடு அன்ன கொளல்
        யாழ்கோடு பாலால் செய்வது ஆய்கு
    (B) எள்ளற்க எவ்வினையும் தொடங்கற்க முற்றும்
        இடங்கண்ட பின்அல் லது.
    (C) உளர்என்னும் மாத்திரையார் அல்லால் பயவாக்
        களர்அனையர் கல்லா தவர்
    (D) வலியில் பெற்றம் நிலைமையான் வல்லுருவம்
        புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று.

13. மின்னனு வாக்குப்பதிவு இயந்திரம் உருவாக்கும் பணியில் பின்வரும் யாருடைய பங்கு முக்கியப் பங்காகும்?
    (A) எழுத்தாளர் சுஜாதா
    (B) காயிதே மில்லத்
    (C) புலவர் இராசு
    (D) இரா. இளங்குமரனார்

14. 'செந்தமிழ் அந்தனர்' என்று அழைக்கப்பட்டவர் யார்?
    (A) புலவர் இராசு
    (B) கவிமணி
    (C) திருஞானசம்பந்தர்
    (D) இரா. இளங்குமரனார்

15. பிறவித் துன்பத்தைத் தீர்க்கும் மருந்துகள் மூன்றாக நீலகேசி தெரிவித்துள்ளது. அவற்றுள் பொருந்தாததைக் கண்டறிக.
    (A) நல்ல நம்பிக்கை
    (B) நல்ல காட்சி
    (C) நல்ல அறிவு
    (D) நல்ல ஒழுக்கம்

16. "வேர்பாரு; தழைபாரு மிஞ்சினக்கால் பற்பசெந்தூரம் பாரே" என்றனர் ..................
    (A) சித்தர்கள்
    (B) திருவள்ளுவர் மற்றும் ஔவையார்
    (C) திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும்
    (D) பொய்கையாழ்வாரும் பூதத்தாழ்வாரும்

17. ‘விழலுக்கு இறைத்த நீர் போல’ - இவ்வுவமைத் தொடருக்கான தனிப்பொருள் யாது?
   (A) எதிர்பாராத நிகழ்வு
   (B) பயனற்ற செயல்
   (C) தற்செயல் நிகழ்வு
   (D) வெளிப்படைத் தன்மை

18. எழுதி வந்தான் - இத்தொடருக்கான இலக்கணக் குறிப்பு தருக.
   (A) முற்றெச்சம்
   (B) குறிப்பு வினையெச்சம்
   (C) தெரிநிலை பெயரெச்சம்
   (D) தெரிநிலை வினையெச்சம்

19. வாய்திறக்கும் முயற்சியுடன் நாக்கின் அடி ஓரமானது மேல்வாய்ப் பல்லைப் பொருந்தும் முயற்சியால் பிறக்கும் எழுத்துகள் எத்தனை?
   (A) 4
   (B) 5
   (C) 2
   (D) 6

20. மரபுநிலை திரிதல் செய்யுட்கு இல்லை
   மரபுவழிப் பட்ட சொல்லின் ஆன
   மரபுநிலை திரியின் பிரிது பிரிதாகும் - என்ற பாடல் வரிகள் இடம் பெற்ற நூல் எது?
   (A) நீலகேசி
   (B) தொல்காப்பியம்
   (C) நன்னூல்
   (D) சிலப்பதிகாரம்

21. கல்வெட்டுகள் .......... நூற்றாண்டு முதல் கிடைக்கின்றன.
   (A) பொ.ஆ.மு. 3 ஆம் நூற்றாண்டு முதல்
   (B) பொ.ஆ.மு. 4 ஆம் நூற்றாண்டு முதல்
   (C) பொ.ஆ.மு. 7 ஆம் நூற்றாண்டு முதல்
   (D) பொ.ஆ.மு. 11 ஆம் நூற்றாண்டு முதல்

22. ஓரெழுத்து ஒருமொழி எழுத்துகளில் உயிர் எழுத்துகள் எத்தனை?
   (A) 6
   (B) 4
   (C) 2
   (D) 5

23. பின்வரும் நூல்களுள் இரா. இளங்குமரனார் தொகுத்த நூல் எது?
   (A) தனித்தமிழ் இயக்கம்
   (B) இலக்கண வரலாறு
   (C) தேவநேயம்
   (D) தமிழிசை இயக்கம்

24. ஆய்த எழுத்து பிறக்குமிடம் ..........
   (A) கழுத்து
   (B) மார்பு
   (C) தலை
   (D) இடுப்பு

25. தக்கர் தகவிலர் என்பது அவரவர் ........... ஆல் காணப்படும்.
   (A) புகழ்
   (B) பண்பு
   (C) பொருள்
   (D) எச்சம்

26. சுகுவாமிக்ஷ் என்ற பழங்குடியினர் வாழ்ந்த நாடு ..........
   (A) அமெரிக்கா
   (B) ஐரோப்பா
   (C) கனடா
   (D) தென்னாப்பிரிக்கா

27. செய்பவர், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் ஆகிய ஆறும் வெளிப்படுமாறு அமைவது ..........
   (A) தெரிநிலை வினைமுற்று
   (B) குறிப்பு வினைமுற்று
   (C) தெரிநிலை பெயரெச்சம்
   (D) தெரிநிலை வினையெச்சம்

28. ‘தமிழகப் பழங்குடிகள்’ என்ற நூலின் ஆசிரியர் யார்?
   (A) சுஜாதா
   (B) சுப்ரபாரதிமணியன்
   (C) டி.கே. சிதம்பரனார
   (D) பக்தவத்சல பாரதி

29. ஓரெழுத்து ஒருமொழியிலுள்ள குறில் எழுத்துகள் எத்தனை?
   (A) 2
   (B) 6
   (C) 4
   (D) 3

30. தமிழ் மொழியை எழுத இருவகை எழுத்துகள் வழக்கிலிருந்தன என எக்கல்வெட்டு மூலம் சான்று அறியலாம்?
   (A) பிராமிய கல்வெட்டு
   (B) கழுகுமலைக் கல்வெட்டு
   (C) புகழூர்க் கல்வெட்டு
   (D) அரச்சலூர்க் கல்வெட்டு

31. இருதிணை ஐம்பால் இயல்நெறி வழாஅமைத்
   திரிவுஇல் சொல்லொடு தழாஅல் வேண்டும்.... என்று உலகத்துப் பொருள்களை இரு திணைகளாகவும் ஐம் பால்களாகவும் பாகுபடுத்திக் கூறுதல் தமிழ்மொழியின் மரபு என்று கூறிய நூல் .......
   (A) தொல்காப்பியம்
   (B) நன்னூல்
   (C) சிலப்பதிகாரம்
   (D) நீலகேசி

32. செந்தமிழே செங்கரும்பே செந்தமிழர் சீர்காக்கும்
   நந்தா விளக்கனைய நாயகியே – முந்தை
   மொழிக்கெல்லாம் மூத்தவளே மூவேந்தர் அன்பே ... எனப் பாடிய புலவர்
   (A) வ. கீதா
   (B) து. அரங்கன்
   (C) புலவர் முத்தரையன்
   (D) புலவர் இராசு

33. சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத் துலங்குக வையகமே! ... எனப் பாடியவர் ..........
   (A) பாரதியார்
   (B) து. அரங்கன்
   (C) வாணிதாசன்
   (D) வெங்கம்பூர் சாமிநாதன்

34. வியங்கோள் வினைமுற்றுக்குப் பொருந்தாத கூற்றுகளைக் கண்டறிக.

1. இது விகுதி பெற்றே வரும்
2. இது விகுதி பெற்றும் பெறாமலும் வரும்
3. இதில் ஒருமை, பன்மை வேறுபாடு இல்லை
4. முன்னிலையில் வரும்

(A) கூற்று 2, 3, 4
(B) கூற்று 1, 4
(C) கூற்று 2, 4
(D) கூற்று 3, 4

35. உயிர் எழுத்துகள் பன்னிரண்டும் ............ ஐ இடமாகக் கொண்டு பிறக்கின்றன.

(A) தலை
(B) கழுத்து
(C) மார்பு
(D) மூக்கு

36. சரியான மரபுச் சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

(A) பூ - பறி
(B) பால் - குடி
(C) சோறு – தின்
(D) பானை - வனை

37. நன்செய் புன்செய்க்கு உணவை ஊட்டி
நாட்டு மக்கள் வறுமை ஓட்டிக்
கொஞ்சிக் குலவிக் கரையை வாட்டி
குளிர்ந்த புல்லுக்கு இன்பம் கூட்டி
- என்று மனித வாழ்வை இயற்கையோடு இணைத்துப் பாடியவர் ............

(A) முடியரசன்
(B) வாணிதாசன்
(C) சுரதா
(D) பாரதியார்

38. பின்வரும் கூற்றுகளுள் ஏவல் வினைமுற்றுக்குப் பொருந்தாத கூற்றுகளைக் கண்டறிக.

1. இருதிணை, ஐம்பால், மூவிடங்களுக்கும் பொதுவாய் வரும்
2. கட்டளைப் பொருளை மட்டும் உணர்த்தும்
3. ஒருமை, பன்மை, வேறுபாடு உண்டு
4. விகுதி பெற்றும் பெறாமலும் வரும்

(A) 1 மட்டும்
(B) 4 மட்டும்
(C) 3, 4 மட்டும்
(D) 3 மட்டும்

39. உலக இயற்கை நாள் ..............

(A) அக்டோபர் 3
(B) அக்டோபர் 5
(C) அக்டோபர் 2
(D) அக்டோபர் 6

40. கலைச் சொற்களைப் பொருத்துக.

| | | |
|---|---|---|
| a. புதர் | - | 1. Thicket |
| b. மொட்டு | - | 2. Bud |
| c. மலைமுகடு | - | 3. Ridge |
| d. பழங்குடியினர் | - | 4. Tribes |
| | - | 5. valley |

(A) 1, 2, 4, 3
(B) 4, 3, 5, 1
(C) 4, 5, 3, 1
(D) 1, 2, 3, 4

41. பழிவரும் முன்னரே சிந்தித்து தம்மைக் காத்துக்கொள்ளாதவருடைய வாழ்க்கை எதைப் போன்றது எனத் திருவள்ளுவர் கூறினார்?

(A) கற்றவர்க்கும் கல்லாதவருக்குமான வேறுபாடு போன்றது
(B) விலங்குக்கும் மக்களுக்கும் உள்ள வேறுபாடு போன்றது.
(C) மனத்தை அடக்கும் வலிமையில்லாதவர் மேற்கொண்ட தவத்தைப் போன்றது
(D) நெருப்பின் அருகில் வைக்கப்பட்ட வைக்கோல் போன்றது.

42. நீலகேசி என்னும் நூலில் அமைந்துள்ள சருக்கங்கள் ............
   (A) 10
   (B) 6
   (C) 8
   (D) 13

43. காலை மாலை உலாவிநிதம்
காற்று வாங்கி வருவோரின்
காலைத் தொட்டுக் கும்பிட்டுக்
காலன் ஓடிப் போவானே! ... என உடற்பயிற்சி, உடல்தூய்மை, நல்ல உணவு ஆகியவையே நல்ல உடல் நலத்திற்கு அடிப்படை எனப் பொருள்தரும் வகையில் பாடல் எழுதிய ஆசிரியர் ............
   (A) நாமக்கல் கவி
   (B) வாணிதாசன்
   (C) பாரதிதாசன்
   (D) கவிமணி

44. ............ நிமிடங்களுக்கு ஒருமுறை நாம் எல்லோரும் மனநிலை மாறுகிறோம் என்று ஆராயிச்சியாளர்கள் சொல்கிறார்கள்.
   (A) 60 நிமிடம்
   (B) 75 நிமிடம்
   (C) 90 நிமிடம்
   (D) 120 நிமிடம்

45. ‘தூண்டில் கதைகள்’ என்ற நூலின் ஆசிரியர் யார்?
   (A) கவிமணி
   (B) வ. கீதா
   (C) சுஜாதா
   (D) பக்தவத்சல பாரதி

46. ‘கதர் பிறந்த கதை’ என்னும் நூலின் ஆசிரியர் ..........
   (A) காந்தியடிகள்
   (B) அம்புஜத்தம்மாள்
   (C) மூவலூர் இராமாமிர்தம்
   (D) கவிமணி

47. தமிழர் மருத்துவத்தில் உணவின் நீட்சியாக இருப்பது ...............
(A) மருந்து
(B) உடற்பயிற்சி
(C) உணவு
(D) வாழ்க்கை

48. உடல் எடை அதிகரிப்பதால் ஏற்படும் நோய்கள் ..........
1. சர்க்கரை நோய்
2. உடல்வலி
3. தலைவலி
4. இரத்தக் கொதிப்பு
(A) 1
(B) 3, 4
(C) 2, 3
(D) 1, 4

49. பின்வரும் நூல்களுள் சுஜாதா எழுதாத நூல் எது?
(A) தலைமைச் செயலகம்
(B) ஸ்ரீரங்கத்துத் தேவதைகள்
(C) மீண்டும் ஜீனோ
(D) கொடிமுல்லை

50. ............. மெய்கள் நாவின் நுனி அண்ணத்தின் நுனியைப் பொருந்துவதால் பிறக்கின்றன.
(A) க், ங்
(B) ட், ண்
(C) ச், ஞ்
(D) ர், ழ்

51. விலங்கு, பறவைகளின் ஒலிமரவு கீழே கொடுக்கப்பட்டுள்ளது. அவற்றுள் தவறான இணை/ இணைகளைக் கண்டறிக.

| | | |
|---|---|---|
| 1. புறா | - | குனுகும் |
| 2. கோழி | - | கூவும் |
| 3. கழுதை | - | கனைக்கும் |
| 4. குதிரை | - | கத்தும் |

(A) 1, 4 மட்டும்
(B) 2, 4 மட்டும்
(C) 2, 3, 4 மட்டும்
(D) 3 மட்டும்

52. ............. என்பது கொங்கு மண்டலத்தின் 24 நாடுகளுள் ஒன்று.
(A) பாண்டிய நாடு
(B) சோழநாடு
(C) தொண்டைநாடு
(D) காங்கேய நாடு

53. செவ்விந்தியர்கள் நிலத்தை ............. ஆக மதிக்கின்றனர்.
(A) தாய்
(B) தெய்வம்
(C) முன்னோர்
(D) தந்தை

54. மணிக்ஷ் சாண்டி, மாதுரி ரமேக்ஷ் ஆகியோர் எழுதிய காடர்கள் கதைகள் சிலவற்றை 'யானையோடு பேசுதல்' என்னும் தலைப்பில் தமிழாக்கம் செய்தவர் ................
(A) ஜெயமோகன்
(B) சுஜாதா
(C) வ. கீதா
(D) ஹெப்சிபா ஜேசுதாசன்

55. பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் ஆகியவற்றுள் ஒன்றனை அடிப்படையாகக் கொண்டு செய்பவரை மட்டும் காட்டுவது .................. ஆகும்.
(A) குறிப்பு வினைமுற்று
(B) குறிப்புப் பெயரெச்சம்
(C) குறிப்பு வினையெச்சம்
(D) குறிப்பு முற்றெச்சம்

56. சரியான கூற்றைக் ஃ கூற்றுகளைக் கண்டறிக
கூற்று 1 :வாழ்த்துதல், வைதல், விதித்தல், வேண்டல் ஆகிய பொருளில் வரும் வினைமுற்று வியங்கோள் வினைமுற்று ஆகும்.
கூற்று 2 :'விதித்தல்' பொருளில் வரும் வினைமுற்று தன்மை இடத்தில் வரும்.
கூற்று 3 :வியங்கோள் வினைமுற்றின் விகுதிகளில் இயர், அல் ஆகிய இரண்டு விகுதிகள் தற்கால வழக்கில் இல்லை. செய்யுள் வழக்கில் மட்டுமே உள்ளது.
(A) 1 மட்டும்
(B) 2 மட்டும்
(C) 1, 3 மட்டும்
(D) 3 மட்டும்

57. தொடர்கள் பொருள் அடிப்படையில் .......... வகைப்படும்.
   (A) 4
   (B) 3
   (C) 2
   (D) 6

58. உலக ஓசோன் நாள் .............
   (A) செப்டம்பர் 15
   (B) செப்டம்பர் 16
   (C) செப்டம்பர் 14
   (D) அக்டோபர் 16

59. யாருக்கு எந்தப் பழியும் ஏற்படாது எனத் திருவள்ளுவர் கூறுகிறார்?
   (A) பொருத்தமான இடத்தை ஆராய்ந்து எந்தச் செயலையும் தொடங்குபவருக்கு
   (B) தனது திறமையை அறிந்து அதற்கான இடங்களில் சிறப்பாகச் செய்படுபவருக்கு
   (C) தன் குற்றத்தை முதலில் கண்டு அதன்பின் பிறருடைய குற்றத்தை ஆராய்பவருக்கு.
   (D) பழிவரும்முன்னே சிந்தித்து தம்மைக் காத்துக் கொள்பவருக்கு

60. பேர்தற்கு அரும்பணி தாம்இவை அப்பிணி
   தீர்தற்குஉரிய திரியோக மருந்துஇவை
   ஓர்தல் தெளிவோடு ஒழுக்கம் ... என்ற பாடல் வரிகள் இடம்பெற்ற நூல் ...........
   (A) நீலகேசி
   (B) சிலப்பதிகாரம்
   (C) யசோதர காவியம்
   (D) மணிமேகலை

61. செய்யுளுக்கும் மரபுக்கும் உள்ள தொடர்பைக் கூறிய நூல் .............
   (A) தொல்காப்பியம்
   (B) பஞ்சமரபு
   (C) இந்திரகாளியார்
   (D) நன்னூல்

62. பசு ........... (ஒலி மரபைத் தேர்வு செய்க)
   (A) பேசும்
   (B) அழைக்கும்
   (C) கதறும்
   (D) அகவும்

63. தமிழ் எழுத்துகளின் பழைய வரி வடிவங்களைக் கோவில்களிலும் செப்பேடுகளிலும் காணமுடிகிறது. இச்செப்பேடுகள் ............. நூற்றாண்டு முதல் கிடைக்கிறது.
(A) கி.பி 11
(B) கி.பி 9
(C) கி.பி 7
(D) கி.பி 8

64. எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே என்பது .......... மொழி
(A) திருவள்ளுவர் மொழி
(B) ஔவையார் மொழி
(C) நன்னூலார் மொழி
(D) தொல்காப்பியர் மொழி

65. மேல்வாய்ப் பல்லின் அடியை நாக்கின் ஓரங்கள் தடித்து நெருங்குவதால் .......... பிறக்கிறது.
(A) ள்
(B) ல்
(C) வ்
(D) ஃ

66. ‘கவிஞரேறு’ என்ற சிறப்புப் பெயர் பெற்றவர் ............
(A) இரா. இளங்குமரனார்
(B) பெருஞ்சித்திரனார்
(C) வாணிதாசன்
(D) முடியரசன்

67. .......... காலத்தில் தமிழகத்தில் எழுதப்பட்ட எழுத்துகள் கண்ணெழுத்துகள் என்று அழைக்கப்பட்டன.
(A) இடைச் சங்க காலத்தில்
(B) கடைச்சங்க காலத்தில்
(C) களப்பிரர்கள் காலத்தில்
(D) முதல் சங்க காலத்தில்

68. ‘காத்து நொண்டிச் சிந்து’ என்ற நூலை இயற்றிய ஆசிரியர் ............
(A) அண்ணாமலையார்
(B) புலவர் இராசு
(C) புலவர் து. அரங்கன்
(D) வெங்கப்பூர் சாமிநாதன்

69. தொல்காப்பியத்திலுள்ள மொத்த இயல்கள் ................
(A) 9
(B) 18
(C) 23
(D) 27

70. தூய காற்றும் நன்னீரும்
சுண்டப் பசித்த பின்உணவும்
நோயை ஓட்டி விடும்அப்பா ... என்று பாடியவர்
(A) வள்ளலார்
(B) நாமக்கல் கவி
(C) கவிமணி
(D) உடுமலை நாராயண கவி

71. நாக்கின் அடிப்பகுதி, மேல் வாய் அடிப்பகுதியைப் பொருந்துவதால் .......... பிறக்கிறது.
(A) வ்
(B) ய்
(C) ல்
(D) ள்

72. காட்டுப் பசுவுக்கு ......... என்று பெயர்
(A) அரிமா
(B) வரிமா
(C) ஆமா
(D) கரிமா

73. சொல்லை (மொழியை) ............. என வகையாக்குவர்.
(A) மூன்று
(B) ஆறு
(C) நான்கு
(D) ஐந்து

74. சங்க காலத்தில் எழுதப்பட்ட எழுத்துகளை
'கண்ணெழுத்துப் படுத்த எண்ணுப் பல்பொதி' என்று நமக்குச் சான்று கூறும் நூல் ............
(A) தொல்காப்பியம்
(B) சிலப்பதிகாரம்
(C) நன்னூல்
(D) தண்டியலங்காரம்

75. தமிழ் எழுத்துகளில் புள்ளிகளால் ஏற்படும் குழப்பங்களைக் களைந்தவர் ...............
   (A) வீரமாமுனிவர்
   (B) அயோத்திதாசர்
   (C) டி.கே. சி
   (D) பெரியார்

76. ஓரெழுத்து ஒருமொழி ஏழு என்று கூறியவர் ................
   (A) நன்னூலார்
   (B) தொல்காப்பியர்
   (C) அகத்தியர்
   (D) சேனாவரையார்

77. மேல்வாயை நாக்கின் ஓரங்கள் தடித்துத் தடவுவதால் ............ பிறக்கிறது.
   (A) ள்
   (B) ல்
   (C) ய்
   (D) ழ்

78. செவ்விந்தியர்கள் வானத்தை ......... ஆக மதிக்கின்றனர்.
   (A) தாய்
   (B) உடன்பிறந்தவர்கள்
   (C) முன்னோர்கள்
   (D) தந்தை

79. தன்முன் உள்ள ஒருவரை ஒரு செயலைச் செய்யுமாறு ஏவும் வினைமுற்று எது?
   (A) வியங்கோள் வினைமுற்று
   (B) தெரிநிலை வினைமுற்று
   (C) குறிப்பு வினைமுற்று
   (D) ஏவல் வினைமுற்று

80. கவிமணி தேசிக விநாயகம் எத்தனை ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றியவர்?
   (A) 33
   (B) 36
   (C) 34
   (D) 32

81. சரியான இணைகளைக் கண்டறிக.

1. படித்து முடித்தான் - தெரிநிலை வினைமுற்று
2. படித்த மாணவன் - தெரிநிலை பெயரெச்சம்
3. ஓடி விழுந்தான் - தெரிநிலை வினையெச்சம்
4. ஓடினான் விழுந்தான் - முற்றெச்சம்

(A) அனைத்தும் சரி
(B) 1, 2, 4 சரி
(C) 2, 3, 4 சரி
(D) 1, 3, 4 சரி

82. முற்றுப் பெறாமல் எஞ்சி நிற்கும் சொல் ............ ஆகும்.
(A) எச்சம்
(B) முற்றெச்சம்
(C) குறிப்புப் பெயரெச்சம்
(D) தெரிநிலை வினையெச்சம்

83. பின்வரும் திருக்குறளின் ஈற்றடியைத் தேர்வு செய்க
அஞ்சாமை அல்லால் துணைவேண்டா எஞ்சாமை
(A) ஊக்கம் அழிந்து விடும்
(B) நாவாயும் ஓடா நிலத்து
(C) எண்ணி இடத்தால் செயின்
(D) உறைநிலத்தோடு ஒட்டல் அரிது

84. வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே – என்று பாடியவர்
(A) நாமக்கல் கவி
(B) பாரதியார்
(C) உடுமலை நாராயணகவி
(D) வாணிதாசன்

85. .......... மற்றும் ......... ஆகிய இரு மெய்களும் மேல்வாயை நாக்கின் நுனி வருடுவதால் பிறக்கின்றன.
(A) ர், ழ்
(B) ற், ன்
(C) ட், ண்
(D) த், ந்

86. 'கொடிமுல்லை' என்ற நூலின் ஆசிரியர் ..........
(A) பாரதிதாசன்
(B) பாரதியார்
(C) வாணிதாசன்
(D) ந. பிச்சமூர்த்தி

87. சிறிய கடிதம் - இலக்கணக்குறிப்பு தருக.
(A) குறிப்புப் பெயரெச்சம்
(B) குறிப்பு வினையெச்சம்
(C) குறிப்பு வினைமுற்று
(D) முற்றெச்சம்

88. சிறுகதைகள், புதினங்கள், நாடகங்கள், அறிவியல் புனைக்கதைகள், திரைப்படக் கதை வசனம் எனப் பல்வேறு துறைகளில் பணியாற்றியவர் ............
(A) து. அரங்கன்
(B) வ. கீதா
(C) புலவர் இராசு
(D) சுஜாதா

89. வளைந்த கோடுகளால் ஆன மிகப் பழைய தமிழ் எழுத்து ......... என அழைக்கப்படுகிறது.
(A) வட்டெழுத்து
(B) சித்திர எழுத்து
(C) வெள்ளோலை
(D) சபையோலை

90. ஓரெழுத்து ஒருமொழியில் யகர வரிசை எழுத்து ஃ எழுத்துகள் எத்தனை?
(A) 4
(B) 3
(C) 2
(D) 1

91. .......... , ............ ஆகிய இருமெய்களும் மேல்வாய்ப்பல்லின் அடியை நாக்கின் நுனி பொருந்துவதால் பிறக்கின்றன.
(A) க், ங்
(B) த், ந்
(C) ற், ன்
(D) ர், ழ்

92. உலக ஈர நில நாள் ............
   (A) பிப்ரவரி 13
   (B) பிப்ரவரி 4
   (C) பிப்ரவரி 2
   (D) பிப்ரவரி 28

93. வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்
   புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று - இத்திருக்குறளில் பயின்று வந்துள்ள அணி யாது?
   (A) உவமையணி
   (B) இல்பொருள் உவமையணி
   (C) உயர்வு சிறப்பு அணி
   (D) எடுத்துக்காட்டு உவமையணி

94. கடல்ஓடா கால்வல் நெடுந்தேர் கடல்ஓடும்
   நாவாயும் ஓடா நிலத்து - இத்திருக்குறளில் பயின்று வந்துள்ள அணி யாது?
   (A) வேற்றுப்பொருள் வைப்பணி
   (B) இல்பொருள் உவமையணி
   (C) பிறிது மொழிதலணி
   (D) உவமையணி

95. முறைப்படி அமைந்த திருக்குறளைத் தேர்வு செய்க.
   (A) சிறைநலனும் இலர்எனினும் சீரும் மாந்தர்
       ஒட்டல் உறைநிலத்தோடு அரிது
   (B) எண்ணியார் எண்ணம் இழப்பர் இடன்அறிந்து
       துன்னியார் துன்னிச் செயின்
   (C) அடுப ஆற்றி ஆற்றாரும் இடன்அறிந்து
       போற்றி போற்றார்கண் செயின்.
   (D) செல்லிடம் சேரின் சிறுபடையான் உறுபடையான்
       ஊக்கம் அறிந்து விடும்.

96. முறைப்படி அமைந்த திருக்குறளைக் கண்டறிக.
   (A) கல்லா ஒருவன் தலைப்பெய்து தகைமை
       சொல்லாடச் சோர்வு படும்.
   (B) அரங்குஇன்றி அற்றே வட்டுஆடி நிரம்பிய
       நூல்இன்று கோட்டி கொளல்
   (C) குற்றமே காக்க பொருளாகக் குற்றமே
       அற்றம் தரூஉம் பகை.
   (D) கல்லாதான் ஒட்பம் கழியநன்று ஆயினும்
       அறிவுடைய யார் கொள்ளார்.

97. ஒரு வினைமுற்று எச்சப்பொருள் தந்து மற்றொரு வினைமுற்றைக் கொண்டு முடிவது ... ஆகும்.
   (A) குறிப்புப் பெயரெச்சம்
   (B) முற்றெச்சம்
   (C) குறிப்பு வினையெச்சம்
   (D) தெரிநிலை வினையெச்சம்

98. திருவள்ளுவர் தவச்சாலையும், பாவாணர் நூலகமும் அமைத்தவர் ..........
   (A) குன்றக்குடி அடிகளார்
   (B) இரா. அரங்கநாதன்
   (C) திருக்குறளார் வீ. முனுசாமி
   (D) இரா. இளங்குமரனார்

99. உயிரின் முயற்சியால் உடலின் உள்ளிருந்து எழும் காற்றானது ...... இடங்களுள் ஒன்றில் பொருந்தி இதழ், நாக்கு, பல், மேல்வாய் ஆகிய உறுப்புகளின் முயற்சியினால் வேறு வேறு ஒலிகளாகத் தோன்றுகின்றன.
   (A) நான்கு
   (B) மூன்று
   (C) ஆறு
   (D) இரண்டு

100. உலக இயற்கைச் சீரழிவுத் தடுப்பு தினம் ......
   (A) அக்டோபர் 3
   (B) அக்டோபர் 5
   (C) அக்டோபர் 6
   (D) அக்டோபர் 4

******

சைதை சா. துரைசாமியின் மனிதநேய அறக்கட்டளை
மனிதநேயம் வளர்ப்போம் மனிதம் மீட்போம்